## 'தட்ஸ்தமிழ்'-இந்தியா சுடர் உதவியால் கல்வித் தடை நீங்கிய கரூர் பள்ளி!

வியாழக்கிழமை, ஜூலை 17, 2008

இலவச நியூஸ் லெட்டர் பெற iG SMS



மேலும் புதிய படங்கள்

-கே.என். வடிவேல்

கரூர்: 'தட்ஸ்தமிழிலில்' வெளியான செய்தியைத் தொடர்ந்து, இந்தியா சுடர் என்கிற தன்னார்வ தொண்டு அமைப்பு உதவிக் கரம் நீட்டியதால், கரூர் மாவட்டம் மாயனூர் அருகே உள்ள அரசு ஆரம்பப் பள்ளிக்கு இரண்டு ஆசிரியர்கள் கிடைத்துள்ளனர்.

கரூர் மாவட்டம் மாயனூர் அருகே அரசு ஆரம்பப் பள்ளி உள்ளது. இந்த பள்ளியில் சுமார் 140 மாணவ, மாணவிகள் கல்வி பயின்று வருகின்றனர்.

ஆனால் இப்பள்ளியில், தலைமை ஆசிரியரோடு சேர்த்து மொத்தமே இரண்டு பேர் தான். இதனால் மாணவர்கள் முறையாக கல்வி கற்பிக்க இயலாத சூழ்நிலை ஏற்பட்டது.

இந்த அவல நிலை குறித்தும், ஆசிரியர்கள் போதுமான அளவில் இல்லாததால், மாணவர்களின் கல்வி பாதிக்கப்படுவது குறித்தும் 'தட்ஸ்தமிழ்' செய்தி வெளியிட்டிருந்தது.

இதைப் பார்த்த இந்தியா சுடர் என்கிற தன்னார்வ தொண்டு நிறுவனம் உடனடியாக களத்தில் இறங்கியது. அந்த அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் பாலமணிகண்டன் உடனடியாக பள்ளிக்கு சென்று உண்மை நிலவரத்தை ஆராய்ந்தார். அதன் அடிப்படையில் தனது நிறுவனத்திற்கு ஆசிரியர் பற்றாக்குறை குறித்து அறிக்கை அளித்தார்.

இதைத் தொடர்ந்து மகேஷ்வரி, செந்தில்வடிவு என இரு ஆசிரியைகள், தொண்டு நிறுவனம் சார்பில் அரசு ஆரம்பப் பள்ளிக்கு தேர்வு செய்யப்பட்டு அனுப்பப்பட்டனர்.

இரு ஆசிரியைகளும் தற்போது மாணவ, மாணவிகளுக்கு ஆர்வமுடன் கல்வி போதித்து வருகின்றனர்.

இந்த இரண்டு ஆசிரியர்களுக்கான சம்பளத்தை இந்தியா சுடர் அமைப்பே ஏற்றுக் கொண்டுள்ளதாக அந்த நிறுவனத்தின் தலைவர் உதயகுமார் தெரிவித்துள்ளார்.

இது குறித்து பள்ளி தலைமை ஆசிரியர் குணசேகரனிடம் கேட்டபோது, பள்ளியில் போதுமான ஆசிரியர்கள் இன்றி பாடம் நடத்த முடியாமல் சிரமாக இருந்தது.

ஆசிரியர்கள் பற்றாக்குறை காரணமாக பள்ளியில் அதிக எண்ணிக்கையில் மாணவர்களை சேர்க்கவும் தயக்கமாக இருந்தது. மேலும் போதிய ஆசிரியர்கள் இருந்தால் மட்டுமே தரமான கல்வியை தர முடியும்.

இது போன்ற கிராமங்களில் வசிக்கும் மக்களுக்கும், குழந்தைகளுக்கும் கல்வி ஒளி கொடுத்த இந்தியா சுடர் நிறுவனத்திற்கும், அதற்கு உதவியாக இருந்த 'தட்ஸ் தமிழ்' இணையதளத்திற்கும் நன்றிகள் என்றார்.

அறியாமை இருள் போக்கும் கல்வி விளக்கு அணையாமல் காத்திட்ட இந்தியா சுடரை எத்தனை பாராட்டினாலும் தகும்.

**இந்தியா சுடர் கல்வி அறக்கட்டளை:**

இந்தியா சுடர் கல்வி மற்றும் தொண்டு அறக்கட்டளை நிறுவனம் பல்வேறு சமூக நலப் பணிகளில் ஈடுபட்டு வருகிறது.

ஆதரவற்றோர் இல்லங்கள், காப்பகங்களுக்கு நிதியுதவி செய்வது, பொருளாதார ரீதியில், நலிவடைந்த பிரிவினருக்கு உதவி செய்வது உள்ளிட்ட பணிகளில் இந்தியா சுடர் ஈடுபட்டுள்ளது.

பல பணிகளில் ஈடுபட்டிருந்தாலும், குழந்தைகளுக்கான கல்வி என்பதை தனது முக்கிய நோக்கமாகவும், சேவையாகவும் இந்தியா சுடர் கொண்டுள்ளது.

தமிழகம் தவிர, கர்நாடகா, புதுச்சேரி, கேரளா ஆகிய மாநிலங்களிலும் தனது சேவை வெளிச்சத்தை பரப்பி வருகிறது இந்தியா சுடர்.

ஊரகப் பகுதிகளில் உள்ள குழந்தைகள் காப்பகங்கள், ஆதரவற்றோர் இல்லங்கள், பள்ளிகள் உள்ளிட்டவற்றை அடையாளம் கண்டு, அங்கு நேரடியாக சென்று ஆய்வு மேற்கொண்டு, அவற்றுக்கு என்ன தேவை என்பதை ஆய்வு செய்து அதற்கேற்ற உதவிகளை இந்தியா சுடர் செய்து வருகிறது.

இந்தியா சுடர் சார்பில் டியூஷன் மையங்களும், கம்ப்யூட்டர் பயிற்சி மையங்ளும் செயல்படுகின்றன.

மாணவ, மாணவியருக்கு புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள், பென்சில், பேனா உள்ளிட்டவை, பள்ளி பைகள், சீருடைகள், காலணிகள் உள்ளிட்டவற்றை ஆண்டுதோறும் வழங்குகிறது இந்தியா சுடர்.

கருத்தரங்குகள், சுய முன்னேற்ற திட்ட நிகழ்ச்சிகள், கலாச்சார நிகழ்ச்சிகள், புதிர் போட்டிகள், வேலைவாய்ப்பு வளர்ச்சி நிகழ்ச்சிகள் ஆகியவற்றையும் இந்தியா சுடர் நடத்துகிறது.


இந்தியா சுடர் குறித்த மேலும் விவரங்களுக்கு http://www.indiasudar.org/ என்ற இணையதளத்தை அணுகலாம்.

(கட்டுரையாளர் தட்ஸ்தமிழ் செய்தியாளர்)


செய்திகள்

- தமிழகத்தில் இடதுசாரிகள் பிரசாரம்
- நள்ளிரவில் 'சைக்கோ'வை துரத்திய மக்கள்!
- போன் டேப் 'லீக்': உபாத்யாயா சஸ்பெண்ட்!
- நேரம் வந்து விட்டது: கருணாநிதி
- மீனவர்கள் தாக்குதலுக்கு கண்டனம்
- காரத்-எம்.பிக்கள் சொத்து குவிப்பு:வழக்கு!
- ராமதாஸூடன் தங்கபாலு சந்திப்பு
- 40 தொகுதிகளிலும் போட்டி: சரத்
- இந்தியாவுக்காக தூதரை அனுப்பும் யுஎஸ்
- அறுந்த மின்கம்பி-ரயில்கள் தாமதம்
- உறுதியாக உள்ளது பெரியாறு: அரசு
- 'நக்கல்' சாக்லெட்-ஏட்டு டிரான்ஸ்பர்
- குருவை பார்க்க தடை
- சட்டவிரோத குடியேற்றம்
- 'அமர் எபெக்ட்'-புதிய செயலர் நியமனம்!


கேலரி




நவ்நீத் கௌர்



முமைத் கான்




கோபிகா



அகராதி



மதுலிகா



Picture of the day

பயாஸ்கோப்

- ரஜினிக்கு ஜோடியான இலியானா!!
- மீண்டும் பஞ்சாயத்தில் பாலா!
- அக்ஷய் குமார் சம்பளம் 75 கோடி?
- முதல்வரை சந்தித்த ஏ.ஆர்.ரஹ்மான்
- ஒரே நாள், 19 படங்கள்!!
- கிளாமர் கோதாவில் விஜயலட்சுமி!
- ஜாக்கியுடன் நடிக்கலை- ஆசின்
- சந்தனக்காடு வெற்றி விழா!
- பாலச்சந்தர்-மனோரமாவுக்கு பாராட்டு
- அமீருக்கு என்ன ஆச்சு...!
- கோபிகா நிச்சயதார்த்தம்!
- ஸ்னேகா 50, நாட் அவுட்!
- விடியும்வரை காத்திரு ரம்பா!
- நான் அவனில்லை!-அலறும் விஷால்
- வரலட்சுமி 'கன்பர்ம்டு'!

Opinion Poll

Will UPA government survive the trust vote?

- No
- Yes
- No Idea

Vote Reset

Results | Previous Results

**Tags:** tn, education, thatstamil, india sudar, mayanur, karur, தமிழ்நாடு, கல்வி, தட்ஸ்தமிழ், இந்தியா சுடர்.

வாசகர் கருத்து

[ **javascript must be enabled to view and post comments.** ]

[ கருத்தை பதிவு செய்யுங்கள் ]

பதிவு செய்தவர்: valavan     பதிவு நேரம்: 18 Jul 2008 12:48 am

ThatsTamil இணையத்திற்கும் இந்தியா சுடருக்கும் வாழ்த்துக்கள்.

[ அனைத்து கருத்துக்களையும் படிக்க.... ]


**இது 'டீல் மா'!**

- 1.2 கோடி மணமகள்-மணமகன்கள்
- திருமணம்?-இங்கே தேடுங்கள்
- உங்கள் மொபைலில் சினிமா தகவல்கள் பெற
  SMS START TAMOVIES 09845398453
- உங்கள் மொபைலில் தமிழ் செய்திகள் பெற
  SMS START TANEWS 09845398453
- நகரில் சினிமா

**Recommended Links**

SMS Updates | Astrology | Chat | RSS | Post Free Classifieds | Online Shopping & Auctions | Jobs | Explore India

Generated by www.PDFonFly.com